# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -10/PW-9 |
| Name | : திரு. நரேந்திரன் |
| Father/Husband's Name | : தாத்தைய்யா |
| Village | : நெ.11/1, சாமந்தி டவர் |
| Taluk | : டவுன்சிப் அனுபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

Accused present.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது Technical Officer/E General Service Organization, Department of Atomic Energy, Anupuram த்தில் பணிபுரிகிறேன். நான் மேற்படி நிறுவனத்தில் 2011 ம் ஆண்டிலிருந்து டெக்னிக்கல் ஆபிசராக பணிபுரிகிறேன். 28.04.2022 அன்று அலுவலக நேரத்திற்கு பிறகு மாலை எனக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது. அதை அடுத்த நாள் காலையில் தான் அலுவலகம் சென்று பார்த்தேன். அது மனோகரிடமிருந்து வரும் வழக்கமான மின்னஞ்சல் இல்லை. அந்த மின்னஞ்சலில் மனோகரன் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அது அவருடைய மின்னஞ்சலா என்று எனக்கு சரியாக தெரியாது எனக்கு சந்தேகமாக இருந்தது. வழக்கமாக வரும் மின்னஞ்சல் @igcar.gov.in என்ற முகவரியிலிருக்கும். எனக்கு வந்த மெயிலில் ஒரு அட்டாச்மெண்ட் இருந்தது. அதை ஓபன் செய்து பார்க்கும் போது அதில் சில புகைப்படங்கள் இருந்தது. அதில் தமிழில் எழுதப்பட்டிருந்தது. எனக்கு தமிழ் படிக்க தெரியாது.

அந்த புகைப்படங்கள் வழக்கமானதாக இல்லை மனோகர் மற்றும் வேறொரு பெண் இருப்பது போன்ற புகைப்படங்கள் அது. நான் இது குறித்து என்னுடன் பணிபுரியும் பணியாளர்களிடம் விசாரித்தேன். நான் தமிழில் இருந்த வாசகங்களை கூகுல் டிரான்ஸ்லேட்டர் மூலமாக மொழி பெயர்த்து புரிந்து கொண்டேன். அந்த மின்னஞ்சலில் இல்லீகல் ஹப்பர் இருப்பது போன்ற வாசகங்கள் இருப்பது போன்று இருந்தது. பணியாளர்களுக்குள் நாங்கள் பேசிக்கொண்டோம். நான் 5 புகைப்படங்கள் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் அதசாஆ 6 ஆவணத்தில் உள்ள புகைப்படங்கள் தான் நான் பார்த்தது. நான் மேற்படி புகைப்படங்களை victormanoharan24@gmail.com என்ற முகவரியிலிருந்து பெற்றேன். narendra@igcar.gov.in என்ற எனது மெயில் ஐடிக்கு மேற்படி மெயில் ஐடியிலிருந்து போட்டோக்கள் வந்தது. மேற்படி மெயில் சுமார் 100 நபர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. மேற்படி விவரம் குறித்து மனோகரன் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக எனக்கு சொன்னார்கள். போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

என்னை போலிசார் 26.09.2022 அன்று விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு மேற்சொன்ன மெயில் ஐடி என்னுடையது கிடையாது என்றாலும், எனக்கு எந்தவிதமான மெயிலும் வரவில்லையென்றாலும், நான் மனோகரனுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் காட்டப்பட்ட புகைப்படங்கள் என்னால் எந்தவொரு காலத்திலும் கனிணியில் பெறப்படவில்லை என்றாலும், அவ்வாறு காவல் துறையினர் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.